# கனேடிய அமைச்சரின் சமாதானமுயற்சி வெற்றியளிக்கவில்லை


விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 20 இதழ் 119

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 03 – 6 – 1995


(கொழும்பு)
இலங்கையில் அமைதி ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகத் தெரிவித்து அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த கனடா அமைச்சர் றேமன் சாள்ஸின் சமாதான முயற்சிகள் எதுவும் வெற்றியளிக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுக்கெதிராக பாரிய ராணுவ நடவடிக்கை ஒன்றைமேற்கொள்ள அரசு ஆயத்தமாகி வருவதையும் புலிகளை அடக்கும் வரை பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு அரசுக்கு ஆர்வமில்லை என்பதையும் அவர் தனது விஜயத்தின் போது உணர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் அமைதிக்கு கனடாவின் ஆதரவை வலியுறுத்தப் போவதாகவும் அமைதிநடவடிக்கையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்

[6-ம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பில்
## ரெயில் - லொறி மோதல் இருவர் பலி; ஐவர் காயம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பிற்கு சென்று கொண்டிருந்த ரெயில் நேற்று அதிகாலை முத்தெட்டுகல என்ற இடத்தில் லொறி ஒன்றுடன் மோதியதால் இருவர் உயிரிழந்தனர் ஐவர் படுகாயமடைந்தனர்.

வாழைச்சேனை நோக்கிச்

[5-ம் பக்கம் பார்க்க]

## ★ ரோந்துப்படை அணியினர் மீது
# மன்னாரில் புலிகள் தாக்குதல்
# நான்கு இராணுவத்தினர் பலி

(யாழ்ப்பாணம்)
**மன்னார் - சனிவிலேஜ் கிராமத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற புலிகளின் தாக்குலில் குறைந்தது நான்கு சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.**

மன்னாரில் பூரண இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள சனி விலேஜ்' கிராமத்தில் நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

ரோந்து சென்ற ராணுவ அணி மீதே விடுதலைப் புலிகளால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மன்னார் தீவுக்கும்- தள்ளாடி முகாமுக்கும் இடையில் அமைந்திருநத விசேட அதிரடிப்படை காவலரண் மீது நேற்றுமுன்தினம் புலிகள் நடத்திய தாக்குதலில் ஆறு அதிரடிப் படையினர் பலியானது குறிப்பிடத்தக்கது. -ரி

## யாழ். கடல் பகுதியில் சுப்பசொனிக் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
பூநகரி யாழ் கடலுக்கு அருகிலுள்ள மான்தீவு என்ற இடத்தில் நேற்று சுப்பசொனிக் விமானம் திடீரென குண்டு ஒன்றை வீசிவிட்டு மின்னல் வேகத்தில் மறைந்து சென்றது.

நேற்று நண்பகல் 1-45மணியளவில் மேற்படி விமானம் யாழ் கடலை அண்டிய பகுதியில் பேரிரைச்சலுடன் வட்டமிட்டு மிக உயரத்திலிருந்து குண்டு ஒன்றை வீசிவிட்டு சென்றுவிட்டது. சுப்பசொனிக் வீசியகுண்டு பூநகரிக்கு அருகிலுள்ள மான்தீவுப் பகுதியில் விழுந்து வெடித்து எரிந்ததை கரையோரப்பகுதிகளில் உள்ள மக்கள் பார்த்ததாகக் கூறினார்கள்.

சுப்பசொனிக் விமானம் திடீரென வானில் பேரிரைச்

(6ம் பக்கம் பார்க்க)

# திரியாய் இராணுவ முற்றுகையை புலிகள் வெற்றிகரமாக முறியடிப்பு!

(யாழ்ப்பாணம்)
திருகோணமலை திரியாய் காட்டினுள் சிறிலங்கா இராணுவத்தினர் பெரும் எடுப்பில் நடத்தியமுற்றுகைமுயற்சியை விடுதலைப் புலிகள் எதுவித இழப்புகளுமின்றி வெற்றிகரமாக முறியடித்துள்ளனர்.

பெரும் எண்ணிககையிலான இராணுவத்தினர் நடத்திய இநத முற்றுகை முயற்சியின் போது விடுதலைப் புலிகள் நடத்திய வீரம் மிகு வேகத் தாக்குதலில் லெப். கேணல் காமினி பெர்னண்டோ உட்பட 16 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

எதுவித இழப்புகளுமின்றி வெற்றிகரமாக சிறிலங்கா இராணுவ முற்றுகையை புலிகள் முறியடித்த இந்த தாக்குதலில் அறுபது விடுதலைப் புலிகளை சிறிலங்கா ராணுவம் கொன்

(6-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின்குண்டுவீச்சில் பொலிஸார் காயம்

(மட்டுநகர்)
மட்டக்களப்பு பேய்தாழையடியில் விடுதலைப் புலிகள் நடத்திய கைக்குண்டு வீச்சுத் தாக்குதலில் சிறிலங்கா பொலிசார் ஒருவர் படுகாயமடைந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

பேய்த்தாழையில் ரோந்துப் பணியில ஈடுபட்டபொலிசார் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த திங

(6ம் பக்கம் பார்க்க)


'ஈழநாடு'
வாரமலர்

நாளை 04-06-95
ஞாயிறு
வெளிவருகிறது

- ★ கே.ஆர். டேவிட்.
- ★ மு. திருநாவுக்கரசு
- ★ பேராசிரியர் சண்முகதாஸ்
- ★ க. சிற்றம்பலம்
- ★ முருகையன்
- ★ ச. தியாகராஜா

ஆகியோரினதும் மேலும் பல எழுத்தாளர்களின் ஆககங்களுடன் வெளிவருகின்றது

அதிக பக்கங்கள்

விலை ரூபா ஐந்து மட்டுமே


# பெருமளவு புலிகள் பலியாவதாக அரசு தரப்பில் பொய்ப் பிரசாரம்

(யாழ்ப்பாணம்)
தென் தமிழீழத்திலும், வட தமிழீழத்திலும தமது தாக்குதலில் பெருமளவிலான விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாக அப்பட்டமான பொய்ப் பிரசாரத்தை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

திரியாய்க் காட்டில் தமது இராணுவ நடவடிக்கை தொடர்வதாக அரசு அறிவித்துள்ளது ஆனல் இந்த இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டு இழப்புக்களைச் சந்தித்த படையினர் தமது நிலைகளுக்குப் பின்வாங்கியுள்ளார்கள்.

இவ்வாறு பல தாக்குதல்களில் இராணுவத்திற்கு ஆயுத தளபாட இழப்பும், உயிரிழப்பும் ஏற்பட்டுள்ள போதிலும் அவற்றையெல்லாம் மூடி மறைத்துவிட்டு பெருந்தொகையான புலிகள் இத் தாக்குதல்களின்போது கொல்லப்படுவதாக பொய்ப் பிரசாரம் மேற்கொண்டு வருகிறது.

சிங்களவர்களை திருப்திப்படுத்தும் நோக்குடனே இவ்வாறுன பிரசாரங்கள் மேற்கொள்ளப் படுவதாக தெரியவருகிறது. ரி

## திரியாயில் கைப்பற்றிய ஆயுதங்கள்

(திருமலை)
திருகோணமலை திரியாய் காட்டுப்பகுதியில் பகுதியில் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

- ★ ஆர். பி. ஜி. - - 1
- ★ ரி 56 ஒன்று ரக துப்பாக்கிகள் - 3,
- ★ ரி 56 இரண்டு ரகத் துப்பாக்கி - 1,
- ★ ரி 56 புதியரகத் துப்பாக்கி - 1
- ★ கே 200 ரக கைக்குண்டுகள் - 8

(6ம் பக்கம் பார்க்க)

# நில அளவைத் திணைக்களத்தின் விமானம் விபத்துக்குள்ளானது

(கொழும்பு)
நில அளவை திணைக்களத்திற்கு சொந்தமான 3 ஆசனங்களைக் கொண்ட 'செஸ்னு' ரக சிறிய விமானம் ஒன்று இரத்மலானை விமான நிலையத்தில் நேற்றுமுன் தினம் விபத்துக்குள்ளானது.

1990ம் அண்டு நில அளவைத் திணைக்களம் கொள்வனவு செய்த இவ்விமானம் கடந்த இரு மாதங்களாக பழுது பார்ப்பதற்கென விமானநிலையத்திலுள்ளகராஜ்

[6ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

பழைய பித்தளை, அலுமனியம் உயர் விலைக்கு வாங்கப்படும். விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்: சிவன் மாடம். 166, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-1495)

### 02 – 06 – 95ல்

### சனி மாற்றம்

எங்கும் விற்பனையாகின்றது ரூபா 10/- யோகர் சுவாமிகளின் தெய்வீக வரலாறும் அடங்கியது. (ஆத்ம ஜோதி திரு. நா. முத்தையா எழுதியது.) சனி மாற்றம் கணிப்பு துர்க்கா ஸ்ரேசனர்ஸ் சுன்னுகம். (சி-1500)

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரைப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1489)

### தொழுநோய் பரிசோதனை

(பண்டத்தரிப்பு)

மல்லாகம் பழைய நீதிமன்ற கட்டிடத்திலுள்ள இடம் பெயர்ந்தோர் அகதி முகாமில் கடந்த சனிக்கிழமை தொழுநோய் பரிசோதனையும் ஆய்வும் யாழ் மாவட்ட தொழுநோய்த் தடுப்பு அதிகாரி திரு. எம். குணரத்தினத்தின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. 72

# காலிவந்த மாலைதீவு கப்பல் கொழும்புக்கு திருப்பப்பட்டது

[கொழும்பு]

மாலைதீவிலிருந்து காலித் துறைமுகத்திறகுக் கப்பலில் ஏற்றிவரப்கப்பட்ட பெரும் தொகையான தகரப்பெட்டிகளில் அடைக்கப்பட்ட மீன் ரின்களை காலித் துறைமுகத்தில் இறக்குவதில் கடற்படையினருக்குச் சந்தேகம் ஏற்பட்டதை அடுத்து, கப்பல் ரின் மீன்களுடன் கொழும்புத் துறைமுகத்திற்கு அனுப்பப் பட்டது.

அண்மையில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: இந்தக் கப்பலிலிருந்து ஒரு தொகை ரின் மீன்கள் ஒரு கொள்கலனில் இருந்து இறக்கப்பட்டன ரின் மீன்களை இறக்கி அடுக்கி வைத்திருந்த மாதிரியில் கடற்படையினருக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

இதையடுத்து இறக்கப்பட்ட ரின் மீன்கள் கொள்கலனுடன் 'சீல்' வைத்துக் காலித் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டதுடன். கப்பலிலிருந்த ஏனைய ரின் மீன்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு அனுப்பப்பட்டதாகத் துறைமுக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சி

## தொடரும் ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன் தினமிரவு 7-45 மணியளவில் இராணுவத்தினர் கடுமஷெல் தாக்குதலைமேற்கொண்டனர்.

### வருடாந்த உற்சவம்

(பண்டத்தரிப்பு)

சித்தன்கேணி ஸ்ரீமகா கணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெறறு 21ம் திகதி திங்கட்கிழமை இரதோற்சவமும் 13ம்திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது. 72

0 0

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் பறுளாய் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் 2ம்திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று இம்மாதம் 12ம் திகதி தேர்த்திருவிழாவும் 13ம் திகதி தீர்த்தக் திருவிழாவும் நடைபெறவுள்ளன. 72

0 0

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேறறத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 13ம் திகதி திருப்பலி பூசையுடன் உற்சவம் முடிவடையும். 72

ஆக்கங்களில்

# விஞ்ஞான கருத்துக்களை புகுத்துவதில் முருகையன் வல்லுனராக இருக்கிறர்

## பேராசிரியர் சண்முகதாஸ் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

''முந்திய காலங்களில் போரில் காட்டிய பல சாகசங்களை நாம் நூல்கள்மூலம்படித்திருக்கிறேம்: ஆனல் இன்று நாம் ஒரு போர் நடவடிக்கைகளுக்கு முகம்கொடுத்து அவற்றை நேரில் பார்த்துக்கொண்டிருககிறேம்.''

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தேசிய கலை இலக்கியப் பேரவை, பல்கலைக்கழக தமிழ் மன்றம் ஆகியவை இணைந்து நடாத்திய 'அகவை அறுபதில் முருகையனின் ஆக்கங்கள்' மதிப்பீட்டரங்கு நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு குறிப்பிட்டார்.

பேராசிரியர் சண்முகதாஸ் தொடர்ந்து உரையாற்றுகையில' அறுபது ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு அறிஞரின் ஆக்கங்களை மதிப்பீடுசெய்தல் அவருடைய வீச்சு காலத்துக்குக் காலம் எப்படி மாறுபட்டஅம்சங்களைக்கொண்டதாக இருக்கும் என்பதை மதிப்பிட்டுக் கொள்வதாக அமைகிறது. இந்த நிகழ்வை நாம் ஒரு மணி விழாவாக நோக்காது அவரின் ஆக்கங்களின் மதிப்பீட்டு விழாவாகவே' வெளிப்படுத்துகிறேம்.

கவிஞர் முருகையன் எமது நாட்டில்நடைபெற்றுக்கொண்டிருக்கும் அனர்த்தங்கள் பற்றிய தனது கருத்துக்களைத் தனது ஆக்கங்கள் மூலம் தெளிவாக எமக்கு எடுத்துக்கூறியுள்ளார். இவர் தனது ஆக்கங்களில் விஞ்ஞானக் கருத்துக்களைப் புகுத்துவதில் வலலுனராக விளங்கினர்.

'வானம் எம் வசம்' நூலில் அவர் அண்மையில் சுட்டுவீழ்த்தப்பட்ட இரு விமானங்கள் பற்றிய தனது கருத்துக்களைத் தெளிவாகக் கூறியுள்ளார். இந்தவகையில் அவர் ஒரு தலைமைக் கவிஞராக மதிக்கப்படுகிறுர் என்றுர்.

கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினத்துரை தனது வாழ்த்துரையில் முன்பெல்லாம் எமது இலக்கிய வாதிகளுக்கிடையில் ஒரு நெருங்கிய உறவு இருந்து வநதுள்ளது. தற்பொழுது இது சில இலக்கியவாதிகளிடம் காணப்படாதிருந்தாலும் கவிஞர் முருகையன் இலக்கிய வாதிகளுடனுனதனது உறவை தொடாந்தும் பேணிவருகிறுர் என்றுர்,

மதிப்பீட்டுரையை குழந்தை ம. சண்முகலிங்கம், கவிஞர் சோ. பத்மநாதன், கலாநிதி நா. சுப்பிரமணயம் ஆகியோர் நிகழ்த்தினர்கள் -162ரி

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–06–03**

சனி இரவு

08-02 புரட்சிக்குரல்
08-05 நிகழ்வும் பகிர்வும்
08-20 நேயர் கடிதங்கள்
08-30 செய்திகள்
08-40 கலந்துரையாடுவோம் ''குருதிச் சோகையும் அதன்பாதிப்புக்களு.''

**1995–06–04**

ஞாயிறு காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 களத்தில் மலர்ந்தவை
07-30 செய்திகள்
υ5-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானெலி நிகழ்ச்சி நிரல்

**1995–06 -03**

சனி மாலை

05-01 சிந்தனைச்சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 வேங்கையின் நெஞ்சம்
05-30 அறிவியல்விஞுடி விஞப் போட்டி
06-00 சிந்தனைக்கு சிலவினாடிகள்
06-02 பாமாலை
06-15 என்தெரிவு
06-30 மாலை நிகழச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## கோண்டாவில் தில்லையம்பதியில் இன்று கொடியேற்றத் திருவிழா



ஒளிககும் சிவகாமி உள்ளமரிற்
களிக்கும் மிகசிந்தையில்
காரணங்காட்டித்
தெளிக்கும் மழையுடன்
செல்வமுண்டாகும்
அளிக்குமவனை அறிந்து
கொள்வாரிக்கே

இரவு 7–30 மணி
புராண வரலாறு
என்னும் பொருள் பற்றி
சிவநெறித்தொண்டன்
செ. சத்தியமூர்த்தி
[ஆசிரியர்]
சமயச்சொற்பொழிவுநிகழ்த்துவார்

(ஏ-4971)

## இராசி பலன்

03–06–1995

சனிக்கிழமை

[தமிழுக்கு வைகாசி–20]

பஞ்சமி முன்னிரவு 11.08 வரை, சித்தயோகம் மாலை 6.58 வரை, இராகு காலம் காலை 8.52 முதல 10.22 வரை சுபவேளை மாலை 2.52 முதல் 4 25 வரை.

மேஷம்: குறும்புத்தனம், அனுவசிய செலவு, பயணத் தடை.

இடபம்; விரும்பியதை அடைதல்; பணவரவு, பாராட்டு.

மிதுனம். வீணை கோபம், அவப்பெயர், அலைச்சல்.

கடகம்; பெற்றேர்நன்மை, இடமாற்றம்' காரியசித்தி.

சிங்கம்: குழறும் செயல், வீண்வாதம், அகாலஉணவு.

கன்னி: தொழில்மேன்மை, கற்பனை, நண்பர் வரவு.

துலாம்: சுபச்செய்தி, சகோதரநன்மை, தெய்வீக செலவு.

விருச்சிகம்: முயற்சிகள் தாமதம், உடல் அசதி, அமைதிக் குறைவு.

தனுசு; இனம்காணப்படல், தொழில்பகை, மனச்சுமை.

மகரம்; புதியமுயற்சி, வெளியார் உதவி, பொதுப்பணி.

கும்பம்: பயனுள்ளசந்திப்பு, இசை ஞானம், புத்திரர் பெருமை.

மீனம்: கலவரமனம், கடமை மாற்றம், வெறுப்பு.

— ஜோஸ்யர்

# செஞ்சிலுவை நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தம்

(கோப்பாய்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்புத் தலைமைச் செயலகம், அதன் கிளைகள் மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளையும் மறு அறிவித்தல் வரை நிறுத்தி வைக்கும்படி பணித்துள்ளது.

தலைமைச் செயலக நிர்வாகம் கலைக்கப்பட்டு, தற்பொழுது இடைக்கால நிர்வாகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இதனையடுத்தே கிளைகளின் நடவடிக்கைகளை நிறுத்தும்படி இடைக்கால நிர்வாகம் பணித்துள்ளது. 166 கி

# சுகாதார ஊழியர்கள் விபரம் திரட்டப்படுகிறது

[பண்டத்தரிப்பு]

யாழ். சுகாதார திணைக் களத்தில் கடமையாற்றி வரும் சகல ஊழியர்களினதும் விபரம் திரட்டப்பட்டு வருகின்றது.

திணைக்களத்தில் கடமையாற்றி வரும் நிரந்தர, தற்காலிக, சமயா சமய ஊழியர்கள் அனைவரும் இந்த ஊழியர் விபரத் திரட்டு படிவத்தை நிரப்பி தத்தமது நிறுவன தலைவருக்கு ஊடாக யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று இது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 79-சி

ரயில் நிலைய அதிபர்களின்

# வேலை நிறுத்தத்தால் ரூ. 12 லட்சம் நஷ்டம்

(கொழும்பு)

ரயில்நிலைய அதிபர்களின் வேலைநிறுத்தத்தால் ரயில்வே திணைக்களத்திற்கு 12 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த வேலைநிறுத்தத்தால் பயணச்சீட்டு விற்காமை, சரக்கு ஏற்றப்படாமையே இந்த நஷ்டத்திற்கு காரணமாகும். இதேவேளை ரயில் சேவையை நிறுத்த சில ரயில் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட செயல்களினல் மேலதிக நஷ்டம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ரயில்நிலைய அதிபர்கள் தற்போது தமது வேலைநிறுத்தத்தை கைவிட்டு வேலைக்கு திரும்பியுள்ளதும் தெரிந்ததே. -சி

# ஒய்வுபெறுவோர் தொகை அதிகரித்து வருகிறது

(கொழும்பு)

அரசாங்க சேவையிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்வோரின் தொகை, தற்போது அதிகரித்து வருவதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. தனியார்துறையில் அரசுத்

[5ம் பக்கம் பார்க்க]

### மணிவாக்கு

இயற்கை உண்மையை அறிந்துகொள்வதற்கு கேள்விஞானம் சிந்தனை ஞானம், அனுபவஞானம என்ற மூன்று ஞானத்தையும் முழுமையாய் பெற வேண்டும்.

— தியானயோகம்.

## நமது நோக்கு

### வழிதவறல்

ஆயுத உற்பத்தி நாடுகள் இராணுவ தளபாடங்களை சிறிலங்கா அரசுக்கு வழங்க ஆயத்தமாய் உள்ளன. அவர்களின் பிரதிநிதிகள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அநுருத்த ரத்வத்தையுடன் பல மணித்தியாலங்கள் பேச்சுக்களில் ஈடுபட்டனராம், ஆயுதங்களை வழங்குவதென்றால் அவற்றை விற்பனை செய்வதென்பதே பொருள். தமது பண்டங்களை வியாபாரிகள் விளம்பரப்படுத்துவதும் அவைதான் மிகவும் நவீனமானவை, தரத்தில் சிறந்தவை என்று கூறுவதும் வியாபாரிகளின் வழக்கம், அதைத்தான் இவ் வியாபாரிகள் செய்கிறார்கள்.

இந்த ஆயுத உற்பத்தியாளர்கள் யார்? அவை வல்லாதிக்க நாடுகளாக விளங்குபவை. அல்லது முன்னர் வல்லரசாக இருந்து தற்போது சிதையுண்டு சிறுசிறு நாடுகளாக விளங்கும் சோவியத் நாட்டின் ஈறறரசுகளும், இரு பொருளாதார கோட்பாட்டை அனுசரிக்கும் சீனா போன்ற நாடுகளுமாகும். இந் நாடுகளில முன்வரிசையில் நிற்பவை அமெரிக்கா, பிரான்ஸ், இஸ்ரேல ஆகியவை. அவை ஆயுத உற்பத்தியை பிரதான கைத்தொழிலாகக் கொண்டவை, சிதைவுண்ட ரஷ்யாவின் பகுதி நாடுகள தம் பொருளாரததை சீர்செய்வதற்கு தம் கைவசம் உள்ள போர்த் தளபாடங்களை விற்றுப் பணமாககவேண்டிய நிலையில் உள்ளவை. சீனாவோ என்றால் கம்பத்தில் நடக்கும் சேர்ககஸ்காரிபோல சோசலிசப் பொருளாதாரத்தையும் முதலாளித்துவ பொருளாதாரத்தையும் கையாண்டு வெற்றிபெற முடியும் என்று மார்தட்டும் நாடு. ஆனால் இந் நாடுகளுக்கெல்லாம் இடையேயுள்ள பொது நோக்கு தம் ஆயுத உற்பத்திகளை விற்பனை செய்வதேயாகும்.

இந்நாடுகளுக்கு சிறிலங்காவில் நல்ல சந்தை வாய்ப்பு தற்போது இருக்கிறது, அதனால்தான் போட்டி போட்டுக்கொண்டு தமது ஆயுத உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு முன்வந்துள்ளார்கள். பேச்சுவார்த்தைகள் நடத்துகிறார்கள். சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்ல தரகு பணமும் கொடுப்பார்கள்.

இங்குள்ள பிரச்சனை என்னவென்றால் சந்திரிகாவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் எந்தப் பிசாசிடமிருந்தும் சிறிலங்கா மக்களை அடைவு வைத்தாவது ஆயுதங்களை வாங்கத் தயார். ஆனால் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ள முஸ்லிம் காங்கிரசும் இடதுசாரி அணியினரும் முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள். இஸ்ரேலுடன் சம்பந்தம் வைத்தால் அஷ்ரப் தான் அரசிலிருந்து வெளியேறி விடுவதாகப் பயமுறுத்துகிறார், இடதுசாரிகள் அமெரிக்காவுடன் தொடர்பு வைப்பதை வன்மையாகக் கண்டிக்கிறார்கள். சிறிலங்காவின் மூத்த படைத் தளபதிகள் இந்தியாவின் உதவி கோருவதை வெறுக்கிறார்கள், இப்படி பல முட்டுக்கட்டைகள்.

நேர்வழியில் செல்லத் தெரியாதவர்கள் கல்லுக்குள்ளும் முள்ளுக்குள்ளும் சென்று இடர்படுவது வழக்கம் தான்.

# விமானப்படையின் உதவியுடனேயே பாரிய இராணுவ தாக்குதல் சாத்தியம்

(கொழும்பு)

விமானப் படையினரின் உதவி இல்லாமல், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பாரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது. தரை வழியாக முன்னேறிச் செல்லும் படையினருக்கு ஆயுதங்கள் மற்றும் உணவு வகைகளை விநியோகிக்கவும், எதிரிகளின் பலத்தைக் குறைக்கவும் விமானப் படையினரின் ஒத்துழைப்பு அவசியம் என இராணுவ ஆய்வாளர் ஒருவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: தற்போது படையினரின் பலத்தைக் கொண்டு வரையறுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளையே செய்ய முடியும்.

பாதுகாப்புப் படையினரின் பாரிய இராணுவ நடவடிக்கைக்கென யுத்த விமானங்களைக் கொள்வனவு செய்வதற் இந்தியா, சீனா, பாகிஸ்தான், ரஷ்யா போன்ற நாடுகளுக்கு அதிகாரிகள் சென்றுள்ளனர். அந்த நாடுகளில் எமகுத் தேவையான ரக விமானங்கள் உண்டா? எமது பொருளாதார நிலைக்கு அவை ஒத்துவருமா? அப்படிக் கொள்வனவு செய்யப்பட்டாலும், அவற்றை இங்கு கொண்டு வருவதற்கு மூன்று மாத காலம் எடுக்கும். அதுவரை பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளாது தினமும் படையினரை இழந்துகொண்டிருக்க முடியுமா போன்ற பிரச்னைகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

பயணிகள் விமானத்தைத் தாக்கியது போன்று, யுத்த விமானங்களை ஏவுகணை மூலம் இலகுவில் தாக்கமுடியாது. அது விமான ஓட்டியின் திறமையைப் பொறுத்தது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை உரிய இராணுவத் திட்டங்களுடன் படையினரை வழிநடத்தினால், புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாண நடவடிக்கைகளை ஒழித்துக்கட்ட முடியும்.

படையினருக்கு வழங்கப்பட்டுவந்த தமிழ்மொழிப் போதனை நிறுத்தப்பட்டதும் படையினரின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது. பொதுமக்களின் மனதை வெல்வதற்குத் தமிழ்மொழி நன்கு பிரயோசனப்படும்

கிழக்கின் அடர்ந்த காடுகளில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, பாரிய கனரக டாங்கிகளைக் கொண்டு செல்ல முடியாது எனவும் அவர்கள் கூறினர். சி

# சுற்றிவளைப்பு, தேடுதல், கைது; மலையகத்தில் பெரும் கொந்தளிப்பு

(பதுளை)

மலையகப் பகுதியில் பல இடங்களிலும் படையினர் குவிக்கப்பட்டடு நடைபெற்று வரும் தேடுதல் மற்றும் கைது நடவடிக்கைகளால் மலையக மக்கள் பெரிதும் ஆத்திரமடைந்துள்ளனர்,

மலையகத்தினுள் புலிகள் ஊடுருவி விட்டதாகவும் மலையகத்திலும் பிரிவினை வலுத்து வருவதாகவும் கூறி ஆயிரக்கணக்கான படையினர் மலையகத்தின் பல பகுதிகளிலும் தினமும் இரவு பகலாக சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர் இதனால மலையக மக்கள் ஆத்திரமடைந்திருப்பதுடன் அங்கு பெரும் கொந்தளிப்பு நிலை உருவாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

லுணுகல பசறை பதுளை மடுல்சீமை, ஹற்றன் உட்பட பலபகுதிகளிலும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அண்மைக் காலங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை விடுதலை செய்யக்கோரி மலையக தொழிற்சங்கங்கள் பல போராட்டத்தில் குதிக்கவும் திட்டமிட்டுளளன. சி

# ஆட்கள் கைது செய்யப்படும்போது புதிய நடைமுறை கடைப்பிடிக்கப்படும்

(கொழும்பு)

ஆட்கள் எவரும் கைதுசெய்யப்படும்போது முப்படையினரும் பொலிஸாரும் கடைப்பிடிக்கவேண்டிய கட்டாய பணிப்புரைகளை, ஜனாதிபதி சந்திரிகா அடுத்த வாரம் பிரகடனப்படுத்தவுள்ளார்.

ஆட்கள கைதுசெய்யப்படும்போது, அவர்கள் ஏன் கைது செய்யப்படுகிறார்கள், எங்கே கொண்டு செல்லப்படுகிறார்கள் அல்லது எங்கே தடுத்துவைக்கப்படுகிறார்கள் என்பதுபற்றிய விபரம் தெரிவிக்கப்பட வேண்டும். அத்துடன் கைதாகும்போது விபரமான 'றிசிற்' ஒன்று வீட்டுக்காரருக்குக் கொடுக்கப்படவேண்டும் என்பது பற்றிய கட்டளை அடுத்த வாரம் ஜனாதிபதியினால் விடப்படவுள்ளது.

இதேவேளை, வடக்கு-கிழக்கு பகுதியில் ஆட்கள் காணாமல் போனது பற்றி விசாரித்து வரும் ஜனாதிபதி விசேட ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையை நேற்று ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளது.

திருகோணமலை கெய்ஸார் மைதானம், ஆதார வைத்திய சாலைகளில் நடந்த சம்பவங்களும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவிற்கு 10 000 பேர் காணமலபோனதாக முறைப்பாடுகிடைத்துள்ளது இடைக்கால அறிக்கையை வாசித்த அமைச்சர் ஜீஎல்பீரிஸ் அதிர்ச்சி தெரிவித்ததோடு ஜனாதிபதி ஆணைக்குழு கேட்டுக்கொண்டதற்கிணங்க, வடக்கு-கிழக்கு பகுதியில் விசாரணைகளை மேற்கொள்ள மேலும கால அவகாசம் தரப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

[கே-சி]

# தமிழ் வர்த்தக நிலையங்களை பகிஷ்கரிக்க கோரிக்கை

]கண்டி]

தமிழ் வர்த்தக நிலையங்களையும், தமிழருக்குச் சொந்தமான நிறுவனங்களையும் பகிஷ்கரிக்கவேண்டுமென 'சிங்கள ஜாதிக பெரமுன' என்ற அமைப்புக் கோரியுள்ளது.

இவ் அமைப்பின் கூட்டம் அண்மையில் கண்டி டி. எஸ். சேனநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அங்கு சிங்கள ஜாதிக பெரமுனவின் அமைப்பாளர்களில் ஒருவரான ஜனபால எஸ், குணவர்த்தன என்பவரும் உரையாற்றினர் அவர் தனது உரையிலேயே அமைப்பின் சார்பில் சிங்கள மக்களிடம் இக்கோரிக்கையை விடுத்தார்.

இந்த நாட்டில் சிங்கள மக்கள் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்றனர். ஏனைய மக்கள் இங்கு குடியேறியவர்களாவர். எனவே இந்நாட்டில் வாழ எமக்கு வாய்ப்பு வசதி இல்லாவிட்டால் நாம் எப்படி பேசாதிருக்கமுடியும். பௌத்த குருமார் அனைவரும் எமது கோரிக்கையை செவிமடுத்து அது நிறைவேறகைகொடுத்துஉதவ வேண்டும்.

சிங்கள மக்களின் நலன்கருதி அரசியல்வாதிகள் தமது வேற்றுமையை மறந்து ஒன்றுபட வேண்டும். நாட்டைப் பிரிப்பதற்கானமுயற்சிகள் இப்போது நடப்பதைப் பார்க்கின்றோம். இலங்கையர் என்றவகையில் நாம் இதனைப்பார்த்துக்கொண்டிருக்கமுடியாது, நாம் இலங்கையர் என்ற அபிமானத்தை உண்டாக்கவேண்டும் எனவும் அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். [கி]

# திருமலை- மூதூருக்கான கடற்பாதை மாற்றியமைப்பு

(திருமலை)

திருகோணமலையில் இருந்து மூதூர் செல்வதற்கான கடல் பாதை தற்போது மாற்றப்பட்டுள்ளது.

மூதூருக்குத் திருகோணமலையிலிருந்ததான வள்ளப் பாதை, இனிமேல் பிறிமா ஆலை மூலம் நடைபெறும்.

பாதுகாப்புக் காரணங்களையிட்டே இந்த மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் அறிவித்துள்ளனர். கே சி

எருவைக் குவித்தால்
பணத்தைக் குவிக்கலாம்

## பலதும் பத்தும்

**மரப்பால் II**

எருக்கம் பால்:

வாயுக்கட்டிகளைக் கரையச் செய்யும. வாதநோய், அளவை மீறிய காய்ச்சல் போக்கும். மருந்தாக மாத்திரமல்லாது மருந்தின் துணைப் பொருளாகவும் உதவுகிறது.

வெள்ளெருக்கப்பால்;

எலிக்கடிக்குச் சிறந்த மருந்து. சுளுக்கு, குளிர் காய்சசல், வாதக்காய்ச்சல் ஆகியவற்றையும் போக்கும்.

காட்டாமணக்குப் பால்:

வெண்மேகம், குன்மம். குழிப்புண்கள் தோற்கட்டிகள் ஆகியவற்றிற்கு அரிய மருந்து.

சிறுமணக்கு:

வயிற்றுவலி குன்மம் வண்டுக்கடி, குறிவீக்கம் ஆகியவற்றிற்கு உதவும். வயிற்றுப் போக்கை உண்டாக்கும். ஆதலால் ... அதன் தடைக்கான மருந்தையும் பின்னர் எடுக்க வேண்டும்.

பிரமதண்டிப்பால்:

கண்கூசல். கண்ணீர் வடிதல், கண்சிவத்தல் ஆகியவற்றிற்கு உதவும்.

குறிப்பு 1

இரப்பல் மரப்பால்உடல், உள வளர்ச்சிக்கு உதவாது. கட்டிபட்ட அந்தப்பால், வேறுபல உபகரணங்களுக்கு உதவுகின்றது.

குறிப்பு 2

தகவலுக்காகவே விபரங்கள் தரப்பட்டன. வைத்தியர் ஆலோசனை பெறுது எதனையும் கண்டபடி பாவித்து வீண் தொல்லைகளைத் தேடாதீர்கள்!

— மயூரன்

# படை முகாமிற்கு ஆபத்தாம் தமிழ் குடும்பங்கள் துரத்தியடிப்பு

(திருமலை)

திருமலையிலுள்ள மனையாவெளி கிராமத்தில் வாழ்ந்த 30க்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள், படையினரால் அங்கிருந்து துரத்தியடிக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள கடற்படை முகாமின் பாதுகாப்பிற்காகவே, இத்தமிழ்க் குடும்பங்கள் துரத்தியடிக்கப்பட்டுள்ளன. துரத்தப்பட்ட குடும்பங்கள் முழுவதும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளன.

இதேவேளை இக்கிராமத்தில் இருந்த 10 சிங்களக் குடும்பங்கள் தொடர்ந்தும் அங்கேயே இருக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

தமக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து மேற்படி தமிழ்க் குடும்பங்கள், நகரசபை அதிகாரிகள் ஊடாகப் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டும் எதுவித பிரயோசனமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. சி

# அப்பலோ ஆஸ்பத்திரிபோல் கொழும்பிலும் மருத்துவமனை

(கொழும்பு)

சென்னையில் உள்ள அப்பலோ மருத்துவமனை போன்றதான மருத்துவமனை ஒன்று, கொழும்பு பார்க் வீதியில் அமையவுள்ளது.

350 படுக்கை வசதிகளும், நவீன சிகிச்சைச் சாதனங்களும் இம்மருத்துவமனையில் அமைந்திருக்கும்.

சென்னை அப்பலோ மருத்துவமனை, உலகின் சிறந்த மருத்துவமனைகளில் ஒன்றாகும்

இந்த மருத்துவமனைக் குழுவினர் கொழும்பிலும் அதே போன்ற வசதியுடன், ஒரு வைத்தியசாலையை அமைத்துக் கொள்ள இலங்கையிலும் அனுமதி பெற்று இப்போது நிர்மாண வேலைகளை ஆரம்பிக்கவுள்ளனர். கே சி

# இந்திய அமைச்சரவை, காங்கிரஸில் 'ராவ்' மாற்றங்கள் செய்கிறார்

[புதுடில்லி]

இந்தியப்பிரதமர் நரசிம்மராவ் இம்மாதம் 11ம் திகதிக்கு முன்பு தமது அமைச்சரவையிலும், காங்கிரஸ் கட்சியிலும் பாரிய மாற்றங்களைச் செய்ய இருப்பதாக, நம்பகரமான செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த மாற்றங்களைச் செய்வதற்காகவே இம்மாதம் 10ம் திகதி பாரிஸ் செல்வதாக இருந்த தமது பயணத்தை இம்மாதம் 11ம் திகதிக்கு ஒதது வைத்துள்ளார்

இந்திய அமைச்சரவையின் 11 அமைச்சின் பொறுப்புக்களை பிரதமர் ராவ் இன்னும் தம்வசம் வைத்திருப்பதினால், அமைச்சரவையில் தமது பலத்தை மேலும் பலப்படுத்துவதற்காக மேற்படி 11 அமைச்சின் பதவிகளுக்கும் புதியவர்களை நியமிக்க திட்டமிட்டுள்ளார்.

காங்கிரஸ் கட்சிக்குள்ளும் தமது பலத்தை அதிகரிப்பதற்காக புதிதாக நியமிக்க இருக்கும் அமைச்சர்களை முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மிக நெருங்கிய நண்பர்களையே நியமிக்கவும் எண்ணி இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [வி-சி]

# பட்டதாரி பயிலுநர் பதவி 4 ஆயிரம் பேர் விண்ணப்பம்

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளை பதிவுசெய்யும் திட்டத்தில் இதுவரை நான்காயிரம் பட்டதாரிகள் தம்மைப் பதிவுசெய்துள்ளனர்.

இவர்களுக்கு விரைவில் பட்டதாரி பயிலுனர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

அதற்கான நேர்முகப் பரீட்சைகள் இம்மாதம் முதல் இடம்பெறவுள்ளன.

இதுவரை தம்மைப் பதிவு செய்யத் தவறிய வடகிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தோரும் நேர்முகப் பரீட்சைக்கு முன் விண்ணப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது. -கி

## ★ யாழ். போதனா வைத்தியசாலையில்

# இரு வாரத்திற்கு தேவையான மருந்துகளே கையிருப்பில் உள்ளது

[யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ள மருந்துகளஞ்சியத்தில் இன்னும் இரண்டு வாரங்களுக்கு தேவையான மருந்து வகைகளே கையிருப்பில் உள்ளன.

பிரதானமான மருந்து வகைகள் கையிருப்பிலிருந்து முடிந்துவிட்டன. இம்மருந்து வகைகளில் சிலவற்றை ஆஸ்பத்திரி நிர்வாகம் தனியாரிடம் வாங்கி நோயாளர்களுக்கு விநியோகித்து வருகின்றது.

இரண்டாம் காலாண்டு மருந்துகள் கப்பலில் எடுத்து வருவது தாமதமாகலாம் எனவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மருந்துகளை கப்பலில் கொண்டுவருவதற்கு மருந்துச் சபையினதும், பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவினதும் அனுமதியை யாழ். போதனா வைத்தியசாலை கோரியுள்ளதும் தெரிந்ததே. - 170-சி

# வெளி மாவட்டத்தவரை பதிவதற்கு மறுப்பு; பதியாதோர் கைது

(கொழும்பு)

வெளி மாவட்டங்களிலிருந்து புதிதாக வரும் தமிழர்களைப் பதிவதற்கு இரத்தோட்டை பொலிஸார் மறுப்புத் தெரிவிக்கின்றனராம்.

இது குறித்து பாதிக்கப்பட்டவர்கள் மாத்தளை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு முறையிட்டுள்ளனர்.

பிற இடங்களிலிருந்து மாத்தளை மாவட்டத்திற்கு புதிதாக வருபவர்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தம்மைப் பதிந்து கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும் இறத்தோட்டைப் பொலிஸார் தமிழர்களைப் பதிய மறுத்து வருகின்றனர்,

இதேவேளை பொலிஸில் பதிவு செய்து கொள்ளாதவர்களை கைது செய்து தடுத்து வைக்கும் நடவடிக்கைகளில் பொலிஸார் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கி

## மந்திகை ஆஸ்பத்திரியில்

# பிரெஞ் வைத்தியநிபுணரின் சேவை ஒருமாதம் மட்டுமே

[வடமராட்சி)

மந்திகை அரசினர் வைத்தியசாலைக்குப் புதிதாக வந்துள்ள எம். எஸ். எவ். சத்திரசிகிச்சை நிபுணரின சேவை ஒரு மாதத்திற்கு மட்டுமே வழங்கப்படுமென தெரிவிககப்படுகிறது.

தென் அமெரிக்க நாடான கெளதமாலாவை சேர்ந்த திரு. யூலியோ பிஸ் என்னும் சத்திரசிகிச்சை நிபுணர் கடந்த 31ம் திகதி மந்திகை ஆஸ்பத்திரியில் சேவையை ஆரம்பித்துள்ளார்.

எனினும் இவரின் சேவை இம்மாதம் மட்டுமே நடைபெறும் என மந்திகை அரசினர் வைத்தியசாலை அதிகாரி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார். -51-சி

## ஐ. நா. படையினரை விடுவிக்க

# ராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டால் பொஸ்னியாவில் இரத்தக்களரி ஏற்படும்

[லண்டன்)

பொஸ்னிய - சேர்பிய படையினரால் பயணக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஐ. நா. படையினரை இராணுவ முயற்சிமூலம் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமானால் இரத்தக்களரிதான் ஏற்படுமென பொஸ்னிய சேர்பிய தலைவர் கரவிச் சர்வதேச சமூகத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாட்டு சமாதான படையை சேர்ந்த 350 பேரை பொஸ்னிய - சேர்பிய படையினர் கைதிகளாக தற்போது பிடித்து வைத்திருக்கிறார்கள்.

நேட்டோ படைகள் சேர்பிய இராணுவ நிலைகள் மீது குண்டுத் தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து தாககுதல் இடம்பெறும் இடங்களில் தாங்கள் பிடித்த ஐ நா. உதவியாளர்களை சேர்பியர்கள் நிறுத்தி வைத்துள்ளனர். இதனையடுத்து தற்காலிகமாக அத்தாக்குதல்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

தங்களிடமுள்ள பணயக் கைதிகளை விடுவிக்க பேச்சுவார்த்தையே ஒரே வழி என பொஸ்னிய - சேர்பிய தலைவர் கூறியுள்ளார்.

இதேநேரம், பிரான்ஸ் தலைவர்கள், 13 மேற்கத்திய நாட்டு தலைவர்களை இந்த நெருக்கடிபற்றி விவாதிக்க இன்று பிரான்ஸ் வருமாறு அழைத்துள்ளனர்.

பொஸ்னிய சேர்பிய தலைவர்களுடன்மேலும் பேச்சுவார்த்தையை வைத்துக்கொள்ள பல மேற்கு நாடுகள் மறுத்துள்ள நிலையில் சேர்பிய படைகளுக்கு எதிராக கூட்டு நடவடிக்கை எடுப்பது பற்றி இம்மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்படும், கே-சி

# வல்லையில் விபத்து இருவர் படுகாயம்

[யாழ்ப்பாணம்)

ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி இரவுவேளை வெளிச்சமின்றி எதிரும் புதிருமாக வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்தனர்.

வல்லைப் பாலத்தில் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிள்களை ஓட்டி வந்தவர்களான கரவெட்டியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை தெய்வசோதி (26 வயது), அச்சுவேலியைச் சேர்ந்த கறுப்பையா சுப்பையா [27 வயது) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

படுகாயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சமபவ தினம் இரவு 6 மணியளவில் இருந்து வல்லைப்பகுதியை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல் நடைபெற்றது.

90- 51 - சி

# வெளி நாட்டு உதவியுடன் புலிகளை விரைவில் அடக்குவோம்

## மாகாண அமைச்சர் சூளுரை

(கொழும்பு)

வெளிநாட்டு உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் பெறறு விடுதலைப் புலிகளை முறியடிக்கப் போவதாக தென்மாகாண கூட்டுறவு சமூக சேவைகள் அமைச்சர் குணரத்ன வீரக்கோன் சூளுரைத்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகிப் பலியான பொலிஸ் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த விஜித் தகுமார என்பவரின் இறுதிக் கிரிகைகள் சில தினங்களுக்கு முன்னர் மாத்தறையில் நடைபெற்றன, அங்கு கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மாகாணசபை அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இந்த நாடு பௌத்தர்களுக்குச் சொந்தமானது, பௌத்த நாட்டைப்பாதுகாப்பது எமது கடமையாகும் தெற்கிலுள்ள மக்களை ஏமாளிகளாக புலிகள் நினைக்கக்கூடாது எனவும் அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் கூறினார். கி

# திரிபோஷா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு யாழ் சுகாதார திணைக்களம் ஒரு தொகுதி திரிபோஷா பைக்கற்றுக்களை விநியோகித்துள்ளது,

இந்த திரிபோஷா பைக்கற்றுககள் சீடான்சா கப்பலில் சுகாதார திணைக்களத்திற்கு எடுத்துவரப்பட்டன' 170-சி

# ஆலய வீதி புனரமைப்பு

[நெல்லியடி]

புலோலி தெற்கு தோட்டத்து ஞான வைரவர் ஆலயத்தின் தெற்குப்புற வீதி புனரமைக்கப்பட்டுள்ளது.

ஆலய முகாமையாளர் மகாவிஷ்ணுகோபால் இதனை புனரமைத்து உதவியுள்ளார் 106

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இசைமாணி நாட்டியமாணி பல்கலைக்கழக அனுமதி 1994/95

மேற்படி பட்டப்படிப்புகளுக்கான அனுமதி என்னும் யூன் மாதம் 29ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். பின்வரும் கற்கை நெறிகளில் கற்பித்தல் இடம்பெறும்.

1. கருநாடக இசை வாய்ப்பாட்டு
2. பண்ணிசை
3. பரதநாட்டியம்
4. கருநாடக இசை வாத்தியங்கள் வயலின், வீணை
5. மிருதங்கம்

அனுமதிக்கான நிபந்தனைகள்

01. க. பொ. த. (உயர்தரம்) ஒரே முறையில் சங்கீதம் அல்லது நடனம் அல்லது இரண்டும் உட்பட நான்கு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

02. க. பொ. த. (உயர்தரம்) ஒரே முறையில் சங்கீதம் அல்லது நடனம் அல்லது இரண்டும் உட்பட மூன்று பாடங்களில் சித்தி பெற்று நான்காவது பாடத்தில் 25 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும்.

இவற்றுடன் நான்கு பாடங்களிலும் மொத்தமாக 180க்கு குறையாமல் புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும். 1992/93 க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை முடிவுகள் அனுமதிக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பல்கலைக்கழக மூதவையினால் ஆற்றுகைக் கலையில அங்கீகரிக்கப்பட்ட பிற தகைமைகளும் பரிசீலிக்கப்படும்.

அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்தினுல் நடாத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சையில் தகுதிபெறல் வேண்டும்.

பல்கலைக்கழக பரீட்சைகளும், அனுமதிகளும் கிளையிலிருந்து பெறப்படும் விண்ணப்ப படிவங்களில் மட்டுமே அனுமதி கோரலை நிரப்பி அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப் படிவமும் ரூபா 20/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலமாக விண்ணப்ப படிவங்களை பெறவிரும்புவோர் ரூபா 20/-க்கான காசுக்கட்டளையும் சுய விலாசமிடப்பட்ட 23x10செ.மீ அளவிலான கடித உறையையும் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். குறித்த விண்ணப்பப் படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

தகுதி உடைய விண்ணப்பதாரிகளுக்கு யூலை மாதம் 10-14 திகதி வரை ஆற்றுகைப் பரீட்சை நடைபெறும். இதற்கான அனுமதி அட்டைகளை அனுப்பி வைப்பதற்கு இலகுவாக யாழ்ப்பாண முகவரியை தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

– பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
1995-06-02

(எ 4975)

---

மட்டக்களப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றுகொண்டிருந்த லொறி ரெயில் கடவையிலுள்ள மூடப்பட்டிருந்த கதவுகளை உடைத்துக் கொண்டு சென்ற போது இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சி-ரி

# இன்று

(கொழும்புத்துறை)

யாழ். கல்வித்திணைக்களம் வலயம் ஒன்றிற்கான தமிழ் மொழி கலைத்திறன் வலய மட்டப்போட்டிகள் இன்று 3-ம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம் பெறும். 154

0 0 0

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோவில் வைகாசி மகோற்சவப் பெருவிழா இன்று 3-ம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி 11-ம் திகதி தேர்த்திருவிழாவும் 12-ம் திகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (ம)

0 0 0 0

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் புகைபிரத வீதி உதய நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் அபிஷேகமும், திக்குளிப்பும் இன்று 3-ம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு இடம் பெறவுள்ளது. (ம)

0 0 0 0

(ஆனைப்பந்தி)

வண்ணை விஸ்வலிங்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடைபெறும்.

8-ம் நாளன்று வேட்டைத் திருவிழாவும் 9-ம் நாளன்று தேர்த்திருவிழாவும் நடைபெற்று 10-ம் நாள் தீர்த்தத் திருவிழாவுடன் மகோற்சவம் நிறைவு பெறும். 101

0 0 0 0

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட மன்றாகும் விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 11-ம் திகதி தேர்த்திருவிழாவும் 12-ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். 170

0 0 0 0

(அச்சுவேலி)

அச்சுவேலி நாவற்காடு காட்டு மலைக்கந்தசாமி கோயில் வருடாந்தத் திருவிழா இன்று 3-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 25 தினங்கள் உற்சவம் நடைபெற்று 28-ம் திகதி புதன்கிழமை பூங்காவனத் திருவிழா நடைபெறும். 7. கி

---

போர் நிவாரணம்

# யாழ் பகுதியுடன் பளையை சேர்க்க முடிவு

(யாழ்ப்பாணம்)

உடனடி போர் நிவாரண நடவடிக்கைகளின் போது யாழ், மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளுடன் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பளை பிரதேச செயலர் பிரிவையும் இணைத்து செயற்படுவதென முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பதினொரு பிரிவுகள் நிவாரண நடவடிக்கைகளின் போது இணைந்து செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. -162-கி

# ஆசிரியர் தெரிவுப் பரீட்சை முடிவுகள் வெளியாகின

(கொழும்பு)

ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக நடாத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

கடந்த டிசம்பர் மாதம் இப்பரீட்சை நடாத்தப்பட்டிருந்தது யாழ். மாவட்டத்திலிருந்தும் பல போட்டியாளர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பெற்ற புள்ளிகள் மாகாண ங்களின் கல்விப்பணிமனைகளினூடாக போட்டியாளர்களுக்கு அனுப்பிவைக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. - கி

திருமலை அலுவலகத்தில்

# சிங்களவர்க்கு நியமனம் தமிழர்கள் புறக்கணிப்பு

(திருமலை)

திருகோணமலை நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கான தொழிலாளர் தெரிவின்போது தமிழ் மொழி மூலமான விண்ணப்பதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தெரிவுக்கான நேர்முகப் பரீட்சைகள் அண்மையில் அநுராதபுரம் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அலுவலகத்தில் நடாத்தப்பட்டன.

இப்பரீட்சைக்கு திருமலை வாசிகளான பல தமிழர்களும் தோற்றியிருந்தனர். எனினும் சிங்கள மொழி மூலம் தோற்றியோரே தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு திருமலையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளகாம். -கி

### புத்தளத்திலும் சோதனை

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தின் பிரதான நகரங்களில் சோதனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பொலிஸாரும், இராணுவத்தினரும் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். கி

### அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீராவியடி ஸ்ரீ ஜெயவிரகத்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகும்.

பத்து நாட்கள் நடைபெறும் இவ் அலங்கார உற்சவத்தில் சிறப்பு நிகழ்ச்சியாக தினமும் மாலை 6-45-7-45 வரை விநாயகர் புராணம் எனும் பொருளில் காரைநகர் சம்பன்கழக அமைப்பாளர் திரு. த. சிவகுமாரன் சொற்பொழிவாற்றுவார்.

### ஓய்வுபெறுவோர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

துறையைவிட, கவர்ச்சிகரமான சம்பளத் திட்டங்கள், சலுகைகள் வழங்கப்படுகின்றமை, அதிகரித்து வரும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள், அரசத்துறையில் பணிபுரிந்தோரைச் சேவையில் அமர்த்துவதற்குத் தனியார் துறை நிறுவனங்கள் காட்டும் அக்கறை என்பன இந்நிலைக்கான சில காரணங்களாகத் தெரிவிக்கப்படுகின்றன.

தற்பொழுது அரச சேவையிலிருந்து வருடாந்தம் சுமார் 20 ஆயிரம் பேர் வரை ஓய்வு பெறுவதாகவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. -இசி

# அறிவித்தல்

தமிழீழ மாவட்ட நீதிமன்று யாழ்ப்பாணம்.

பரமேஸ்வரன் பெண் கலாரஞ்சினி, திருநெல்வேலி,

வழக்காளி

வழ. இல:-ம.நீ/177/95

செல்லத்துரை பரமேஸ்வரன், பால்பண்ணை வயிரவ கோவிலடி, கோப்பாய். தற்போது இந்தியா.

எதிராளி

இத்தால் சகலருமறிக, மேற்குறித்த வழக்காளி மேற்குறித்த எதிராளிக்கெதிராக இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார், என்றும் இவ்வழக்கில் அக்கறையுள்ள ஆள் எவரேனும் ஏதும் ஆட்சேபனை இருப்பின் 15-06-1995 திகதி காலை 9-00 மணிக்கு சமுகமளித்து தெரிவித்துக் கொள்ளலாம். என்றும் அவ்வாறு ஆட்சேபனை ஏதும் தெரிவிக்காத பட்சத்தில் இவ்வழக்கு ஒருமுகமாக விளங்கி வழக்காளி கேட்டபடி தீர்ப்பளிக்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

01-06-1995,
யாழ்ப்பாணம்.

மன்றின் கட்டளைப்படி

பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
யாழ்ப்பாணம்.

(சி-1502)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

இசைக்கலைமணி/ நாட்டியக்கலைமணி பயிற்சி நெறியினைப் பயிலுவதற்கான அனுமதி - 1993/94

மேற்குறித்த பயிற்சி நெறியினைப் பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

தகைமைகள்

(1) விண்ணப்பதாரிகள் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில்குறைந்தது மூன்றுபாடங்களில்கர்நாடகசங்கீதம்அல்லது பரதநாட்டியம் ஒரு பாடமாக சித்தி பெற்றிருத்தல் வேண்டும். சர்நாடக சங்கீதம்அல்லதுபரதநாட்டியத்தில் சித்திபெறுதவர்கள் வடஇலங்கைச் சங்கீத சபையினரால் நடாத்தப்படும் தரம் 4 சித்தி பெற்றிருப்பதுடன் க.பொ.த(உயர்தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரி 29-06-1995 அன்று 15 வயதிற்கு மேற்பட்டவராகவும் 25 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

29-06-1995இல் மேற்குறிப்பிட்ட கல்வித் தகைமைகள் யாவுமுடையவராக இருத்தல் வேண்டும்.மேற்கூறப்பட்ட வைக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையிலிருந்து பெறப்படும் விண்ணப்பப்படிவங்களில் மட்டுமே அனுமதி கோரலை நிரப்பி அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப் படிவமும் ரூபா 20/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலமாக விண்ணப்படிவங்கள் பெறவிரும்புவோர் ரூபா 20/-க்கான காசுக்கட்டளையையும் சுயவிலாசமிடப்பட்ட 23 x 10 செ மீ அளவிலான கடித உறையும் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். குறித்த விண்ணப்பப் படிவங்களில், அனுப்பப்படும் விண்ணப்பங்கள்மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்

தகுதிஉடைய விண்ணப்பதாரிகளுக்கு யூலை மாதம் 10 - 14 திகதி வரை ஆற்றுகைப் பரீட்சை நடைபெறும், இதற்கான அனுமதி அட்டைகளை அனுப்பிவைப்பதற்கு இலகுவாக யாழ்ப்பாண முகவரியை தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
1995-06-02

[ஏ-4974]

# ஆறு இலங்கைத் தமிழர்கள் பிலிப்பைன்சில் கைதானார்கள்

(கொழும்பு)

இலங்கை தமிழர் ஆறு பேர் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் வைத்து பிலிப்பைன்ஸ் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளினால் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ் அறுவரும் பிரிட்டன், கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு சட்டவிரோதமாக ஆட்களை கடத்தும் முயற்சியில் ஈடுபட்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது

அமெரிக்கா, கனடா, பிரிட்டன், இலங்கை ஆகிய நாடுகளுக்கான சட்டபூர்வமற்ற பிரயாண தஸ்தாவேஜுகள் மற்றும் ஆவணங்களும் இவர்களது மணிலா வாசஸ்தலத்தில் கைப்பற்றப்பட்டதாக மணிலா பொலிசார் தெரிவித்துள்ளனர்

கடந்த ஜனவரி மாதத்தில் பாப்பரசர் 2வது அருளப்பர் சின்னப்பரை பிலிப்பைன்சில் வைத்து கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி தொடர்பாகவும், பசுபிக் பிராந்தியத்திற்கு மேலாக பறந்த அமெரிக்க விமானம் ஒன்றை குண்டு வைத்து தகர்க்க திட்டமிடப்பட்டமையை அடுத்து வெளிநாட்டுத் தீவிரவாதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தீவிர கண்காணிப்பையடுத்தே மேற்படி அறுவரும் கைது செய்யப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

-க-ரி

## வவுனியா தொலைத் தொடர்புக் கோபுரத் தகர்ப்பினால் 25 லட்சம் ரூபா நட்டம்

(கொழும்பு)

வவுனியாவில் தொலை தொடர்புக் கோபுரம் தகர்க்கப்பட்டதால் 25 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதுடன் 600 தொலைபேசி இணைப்புகளும் சேதமடைந்துள்ளதாக ரெலிகொம் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை தகர்க்கப்பட்ட கோபுரத்தின் புனர்நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வவுனியாவுக்கும், ஏனைய பகுதிகளுக்குமான தொலை தொடர்பு அடுத்த வாரம் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் இந்த கோபுரம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதும் தெரிந்ததே.

-சி-ரி

## பல்கலைக்கழகத்துக்கு டீசல் அனுப்ப முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்குரிய டீசலை கப்பலில் அனுப்பி வைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு பல்கலைக் கழகத்துக்கு உறுதியளித்துள்ளது.

சென்ற மே மாதத்திற்கான கோட்டா டீசலை கப்பலில் எடுத்துவருவதற்கு அனுமதியளிக்குமாறு யாழ். பல்கலைக் கழக பதிவாளர் நேற்றுமுன் தினம் யாழ். செயலக தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு பாதுகாப்பு அமைச்சை கேட்டுள்ளார்.

இதற்கமைய பல்கலைக்கழகத்திற்கான டீசலை கப்பலில் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக பாதுகாப்பு அமைச்சு யாழ். பல்கலைக்கழகத்திற்கு உறுதியளித்துள்ளது.

(170 ரி)

## மரண அறிவித்தல்



### திருமதி நாகம்மா கனகராசா

மில்க்வைற் அதிபர்

திரு. கந்தையா கனகராசா அவர்களின் துணைவியார்

### திருமதி நாகம்மா கனகராசா அவர்கள்

நேற்று (02-06-1995) அதிகாலை 3-00 மணியளவில் இறைபதம் எய்தி விட்டார். இறுதிக் கிரியைகள் அன்று மாலை நடைபெற்றுத் தகனம் கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெற்றது. உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் இதனை அறியத்தருகிறோம்,

"திருஆலவாய்"
525/2, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
க. கனகராசா
(கணவர்)

(எ-4973)

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலிருந்து வடக்கு-கிழக்கு மாகாண அரசின் கீழ் சாரதிகளாக பணியாற்றுவதற்கு விண்ணப்பம் செய்திருந்த கீழ்க்காணப்படும் விண்ணப்பதாரிகள் இம்மாதம் 16ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா கச்சேரியில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

விண்ணப்பதாரிகளின் விபரம் வருமாறு:

எம். கந்தையா, உரும்பிராய் தெற்கு, எஸ். டி. அருள்செல்லம், யாழ்ப்பாணம், எஸ். சிவலட்சணம் மாதகல் மேற்கு, என். வி. வின்சன், யாழ்ப்பாணம், ஜே. பாலசிங்கம், திருநெல்வேலி கிழக்கு, எஸ். தவேந்திரன உடுவில் கிழக்கு, கே. விக்கின கணேசமூர்த்தி, கொடிகாவில், கே. பேரின்பநாதன் யாழ்ப்பாணம்,

-162-ரி

## திரியாயில்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

றதாக அப்பட்டமான பொய் பிரச்சாரம் ஒன்றை சிறிலங்கா அரசு மேற்கொண்டுள்ளது ஆனால் எதுவித இழப்புக்களையும் இந்த தாக்குதலில் விடுதலைப் புலிகள் சந்திக்கவில்லை என்பதே உண்மையானதாகும்.

மேற்படி தாக்குதல் பற்றிய விபரம் வருமாறு: நேற்றுமுன் தினம் திருகோணமலை திரியாய் காட்டினுள் விடுதலைப் புலிகளை அழித்தல் என்ற பெயரில் சுமார் ஆயிரம் இராணுவத்தினர் நுழைந்தனர்.

காட்டுக்குள் நுழைந்த இந்த தாக்குதல் அணிமீது மாலை 5 மணியளவில் விடுதலைப் புலிகள் வேகம்மிகு தாக்குதலை நடத்தினர்.

யான் ஓயா காட்டுப்பகுதியில் வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரில் பத்துப் பேரின் சடலங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

இந்தத் தாக்குதலில் 38க்கு மேற்பட்ட படையினர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களையும் இறந்த ஏனையவர்களின் சடலங்களையும் ஏனைய இராணுவத்தினர் தூக்கிக்கொண்டு பின்வாங்கிச் சென்றார்கள்.

இந்தத் தாக்குதலில் விடுதலைப்புலிகளுக்கு முள்குத்திய காயம்கூட ஏற்படவில்லை.

இந்த நிலையில் திரியாய் காட்டில் விடுதலைப் புலிகள் முகாம் ஒன்றை முற்றுகையிட்டு வெற்றிகரமாகத் தாக்கி அறுபது புலிகளைக் கொன்றதாக பொய்ப் பிரசாரத்தை சிறிலங்கா அரசு மேற்கொண்டுள்ளது.

(ரி)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 03-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.

## வன்செயல் பாதிப்பு நட்டஈடு வழங்க யாழ். செயலகத்துக்கு ஒருகோடி ரூபா ஒதுக்கீடு

[கொழும்பு]

யாழ். மாவட்டத்தில் வன்செயல சம்பவங்களினால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நட்ட ஈடு வழங்க ஒரு கோடி ரூபாவை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது,

இந்நிதியைக் கொண்டு 202 குடும்பங்களுக்கு நட்ட ஈட்டு தொகையை வழங்க உத்தேசித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குடும்ப தலைவரை இழந்த குடும்பங்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாவும் தனி நபராயின் அவரை அண்டி வாழ்வோருக்கு 25 ஆயிரம் ரூபாவும், இளைஞர்களாயின் அவரதுகுடும்பத்திற்கு 15 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே பொன்னம்பலம் நட்ட ஈட்டு தொகையை வழங்குவதற்கு ஏழரை கோடி ரூபாவை ஒதுக்குமாறு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுக்கு விண்ணப்பித்ததை அடுத்து முதற்கட்ட நடவடிக்கையாக ஒரு கோடி ரூபாவை வழங்கியதாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

-க-ரி

## ஐரோப்பிய நாடுகளில் அரசுக்கு எதிராக பெரும் பிரச்சாரம்!

[கொழும்பு]

இலங்கையில் மூன்றும் ஈழப் போர் ஆரம்பமானதன் பின்னர் இலங்கை அரசுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் பிரசார நடவடிக்கைகளை இலங்கை அரசினால் தடுக்க முடியாதுள்ளது.

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவம் மேற்கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் பொதுமக்கள் மீது மனித உரிமை மீறல் செயல்களையே தற்போது செய்து வருகின்றது என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

இராணுவத்தின் இந்த மனித உரிமை மீறல் செயல்களுக்கு எதிராக விடுதலைப்புலிகள ஐரோப்பிய நாடுகளில் செய்துவரும் பிரசாரங்களைத் தடுப்பதற்கு இலங்கை அரசு முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் எந்தஒரு பலனும் இலங்கை அரசுக்கு கிடைக்கவில்லை. அதற்கு எதிர்மாறாக ஐரோப்பிய நாடுகளின் பகட்டான பேச்சின் ஆதரவுதான் இலங்கை அரசுக்குக் கிடைத்து வருகின்றது. இவ்வாறு பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

வி ரி

## புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று கொக்கட்டிச்சோலையில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் விசேடஅதிரடிப்படையைச்சேர்ந்த ஒருவர் படுகாயமடைந்தார்,

-ரி

## புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

- ★ பி 88 ரக கைக்குண்டு - 3
- ★ எம் 75 ரக கைக்குண்டு - 7.
- ★ 40 மில்லிமீற்றர் எறிகணைகள் - 14.
- ★ ஆர். பி. ஜி எறிகணைகள் - 14,
- ★ ஆர். பி. ஜி. புறொபிளர்கள் -8,
- ★ 60 மி. மீற்றர் ஸ்கோப் -1
- ★ 60 மி. மீற்றர் எறிகணைகள் - 4,
- ★ நடுத்தரரவைகள்- 9036,
- ★ நடுத்தரரவைத் தொடர்கள் - 676,
- ★ நேட்டோரவைத் தொடர்கள் - 28,
- ★ கிளைமோர்கள் - 9,
- ★ கிளைமோர் வெடிக்கருவிகள் - 11
- ★ வயர்ரோல் - 10,
- ★ ஏ, கே. ரவைக் கூடுகள் - 38,
- ★ ரி 81 ரவைக்கூடுகள் - 3,
- ★ ஏ. கே. எல். எம். ஜி ரம் ரவைக்கூடுகள் - 2,
- ★ ஏ. கே. எல். எம், ஜி. ரவைக்கூடுகள் தாங்கி அணிகள் - 17,
- ★ இராணுவத் தொப்பிகள்-10
- ★ இராணுவ பைகள் - 40
- ★ மழைக்கவசம் - 40,
- ★ அதிரடிச்சவள் - 1,
- ★ கத்திகள் - 5,
- ★ இராணுவ சப்பாத்துக்கள் - 17,
- ★ தொலைநோக்கி - 1,
- ★ தலைக்கவசங்கள் - 35,
- ★ 60 மி மீற்றர் பேஸ் பிளேஸ் - 1,
- ★ தண்ணீர் கலன்கள் -125,

வி-ரி

## யாழ். கடல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சலுடன் வட்டமிட்ட போது யாழ் நகரிலும் குறிப்பாக கரையோரப் பகுதியிலும் பெரும் பதட்டம் நிலவியது, யாழ். நகரில் கூடுதலான பாடசாலைகள் உடனடியாக மூடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

90-155-170-வி-ரி

## கனேடிய

[1ம் பக்கத்தொடர்ச்சி]

பாக தான் ஆராயப்போவதாகவும் இலங்கைக்கு வருகை தருவதற்கு முன்பாக கனேடிய அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது,

இதேவேளை கடந்த வாரம் கொழும்பு வந்த ஆஸ்திரேலிய அமைச்சர் கண்டறிந்தது போல இரு தரப்பும் தற்சமயம் பேச்சுவார்த்தைகள் நடத்தும் மனநிலையில் இல்லை என்பதையும் கனேடிய அமைச்சர் தெரிந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

(ரி)

## நில அளவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜில் நிறுத்தப்பட்டிருந்தது.

வானத்திலிருந்து படங்களை எடுக்கக்கூடிய கமரா சாதனங்களும் இந்த விமானத்தில் பொருத்தப்பட்டுள்ளது. பரீட்சார்த்தமாக செலுத்தப்பட்டபோது இந்த விமானம் விபத்துக்குள்ளாகியது.

விபத்துக் குறித்து விசேட குழுவொன்று விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. விபத்துக்குள்ளான இந்த விமானத்தின் பெறுமதி ஐந்து கோடி ரூபாவாகும்.

-சி-ரி

இலைகளுக்குள்ளே
இலைபோல இருப்பார்
இடத்திற்கேற்ப
நிறம்மாறிக் கொள்வார்.
களை பிடுங்காமல்
பயிர் வளராது!
கவனித்துப் பாரீர்!